# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 08.01.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் பக்கரா -வின் 246 வது வசனத்தை ஓதினார்கள்:**

**மன்ஸல்லஸீ யு(q)க்ரிலுல்லாஹ (q)கர்ளன் ஹஸனன் ஃபயுளாஇஃபஹு லஹு அள்ஆஃபன் கஸீரா. வல்லாஹு ய(q)க்பிளு வய(b)ப்ஸு[த்]து வஇலய்ஹி துர்ஜஊன் –** அல்லாஹ்விற்கு நல்ல கடனை வழங்குபவர் யார்? அதன் காரணமாக, அவன் அதனை பன்மடங்காகப் பெருக்குவான். அல்லாஹ் (அடியாரின் பொருளைப்) பெற்றுக் கொண்டு, பெருகச் செய்கிறான். நீங்கள் அவனிடமே திரும்பவும் கொண்டு செல்லப்படுவீர்கள். (2:246)

உலகியல் அமைப்பாக இருந்தாலும் அல்லது மார்க்க அமைப்பாக இருந்தாலும், உலகில் எந்த அமைப்பையும் நடத்துவதற்கு பணம் மிகவும் அவசியமான ஒன்றாகும். அதன் மூலமே நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளையும் அடியார்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் சரிவர நிறைவேற்ற முடியும்.

**இது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

சந்தா வசூலித்தல் என்பது இப்பொழுது மட்டும் தொடங்கப்பட்டதன்று. மாறாக, பொருள் தேவைப்படும் காலத்தில் நபிமார்களின் ஜமாஅத்தில் கூட சந்தா வசூலிக்கப்பட்டது. சந்தாவுக்கான சைகையினைப் பெற்றதும் தமது அனைத்துப் பொருள்களையும் கொண்டுவந்து குவித்தனர். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம்மால் முடிந்த அளவு கொடுக்க வேண்டும் என்றுதான் அறிவித்தார்கள். யார் எவ்வளவு சந்தாவை கொடுக்கிறார் என்று பார்ப்போமாயின், உலக ஆட்சிகளுக்கும், மார்க்க காரியங்களுக்காக வசூலிக்கப்படும் சந்தாவுக்கும் வித்தியாசம் என்னவெனில் உலகியல் ஆட்சிகள் அதிகாரத்துடன் வரிகளை விதித்து பணத்தை வசூல் செய்து விடுகின்றனர். மார்க்க அமைப்புகளில் சந்தா கொடுப்பது மக்களது விருப்பத்திற்கு விடப்படுகிறது. சந்தா கொடுப்பதால் ஈமானில் முன்னேற்றம் ஏற்படுகிறது. அது அன்பு, களங்கமற்ற தூய்மையுடன் செய்யும் பணியாகும். ஆகவே ஜமாஅத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சந்தாக்கள் இந்த வகையைச் சார்ந்தவை. ஜமாஅத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மக்கள் சந்தா கொடுக்கின்றனர்.

வஸிய்யத் சந்தா, கட்டாயச் சந்தா, ஜல்ஸா ஸாலானா சந்தா ஆகியவைகள் ஜமாஅத்தின் சந்தாக்களின் முக்கியமானவையாகும். இன்னும் சில சந்தாக்கள் கட்டாயமானவையல்ல. ஸக்காத் இஸ்லாத்தின் அடிப்படை கடமைகளுள் ஒரு கடமையாகும். அல்லாஹ்விடமிருந்து அதற்கான கட்டளை வந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸக்காத் வசூலிப்பதற்கு சிறப்பான ஏற்பாடுகளை செய்தார்கள். அதனை வசூலிப்பதற்கான அந்த ஏற்பாட்டை முஸ்லிம் என்று தம்மை அழைத்துக் கொண்டே சிலர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு நிராகரித்தார்கள். எவருக்கு ஸக்காத் கொடுப்பது கடமையாகி விட்டதோ அவர் அதனை கொடுப்பது மிக மிக அவசியமாகும்.

இந்த ஸக்காத் வசூலுக்குப் பிறகும் கூட மேற்கொண்டு தேவை ஏற்படும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னும் அதிகப்படியான சில சந்தாக்களுக்கான அறிவிப்பும் செய்தார்கள். எனவே ஜமாஅத்தில் வஸிய்யத் அமைப்பு உள்ளது. வஸிய்யத் சந்தாவும் அதோடு சேர்ந்து தொடர்ந்து வருகிறது.

1905 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையைப் பெற்று இந்த ஏற்பாட்டை தொடங்கினார்கள். அந்த வஸிய்யத் அமைப்பில் இணைபவர்கள் பத்தில் ஒரு பாகம் முதல் மூன்றில் ஒரு பாகம் வரை மனப்பூர்வமாக வழங்குவேன் என்று வஸிய்யத்தில் இணைபவர் உறுதி எடுக்கிறார்.

அதேபோன்று அவரது மரணத்திற்குப்பின் அவர் விட்டுச் சென்ற சொத்தில் அவருக்கு அளித்த விகிதாச்சாரப்படி ஜமாஅத்திற்கு வழங்குமாறு அவரது வாரிசுகளிடம் கோரப்படுகிறது.

ஒவ்வொரு மூஸி (வஸிய்யத் செய்தவர்)யும், தனது உண்மையான வருமானத்திற்குரிய சந்தாவை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எந்த விதமான தவறும் இவ்விஷயத்தில் ஒரு மூஸி செய்யமாட்டார். ஒவ்வொரு மூஸியும் தமது சொத்தை எப்போதும் கணக்கிட்டு வரவேண்டும். தக்வாவை விட்டு விலகியவாறு ஏதாவது ஒரு சிறு வருவாயைக் கூட கணக்கில் கொண்டு வராமல் அல்லாஹ்வுடன் செய்த உடன்படிக்கைக்கு மாறு ஏதும் செய்யவில்லையே என்று தம்மைத்தாமே உற்று கவனிக்க வேண்டும்.

வஸிய்யத் செய்தவர், வஸிய்யத் செய்தவள் ஆகிய இரு பிரிவினரும் ஜமாஅத்தில் தக்வாவின் உயர்நிலையை அடைய முயற்சி செய்யும் கூட்டத்தினர் என்று கருதப்படுகின்றனர். இவர்கள் எல்லா நிலையிலும் குர்பானியின் உயர் தகுதியை நிலைநாட்டுபவர்கள் ஆவர். தமது வருவாயின் ஒரு பகுதியை இறை திருப்தியைப் பெறுவதற்காக மனமகிழ்ச்சியுடன் எடுத்து வைப்பவர்களாவர். மேலும் தமது செயல்களையும் கவனித்து வருபவர்களும் தனது இபாதத்தின் தகுதியை உயர்த்த முயற்சி செய்பவர்களும் ஆவர். உண்மையான மூஃமின் ஆவதற்கு எல்லா முயற்சிகளும் செய்து தமது பாதத்தை முன்னோக்கி வைப்பவர்களாவர்.

இதே உணர்வுடன் ஒவ்வொரு மூஸியும் வஸிய்யத் செய்பவராகவும் பணி செய்பவராகவும் அல்லாஹ் ஆக்குவானாக. பிறகு ஸக்காத் பற்றி கூறிவிட்டேன். அடுத்து ‘சந்தா ஆம்’ இதுவும் விகிதாச்சாரப்படி கொடுக்க வேண்டிய சந்தாவாக ஜமாஅத் நடைமுறைப்படுத்தியுள்ளது. விகிதாச்சாரம் பதினாறில் ஒரு பங்கு ஆகும். இந்த சந்தா இரண்டாவது கிலாஃபத் காலத்திலிருந்து விகிதாச்சாரப்படி தரும் சந்தாவாக இவ்வாறு முறைப்படுத்தப்பட்டது. இந்த சந்தாவும் உண்மையில் பார்க்கப்போனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் தான் தொடங்கியது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார்கள். மாதாமாதம் சந்தா கொடுப்பதை உங்கள் மீது கடமையாக்கிக் கொள்ளுங்கள். அது ஒரு பைசாவாக இருந்தாலும் சரியே. 16-ல் ஒரு பங்கு சந்தா ஏன் கொடுக்க வேண்டும்? என்று மேற்கண்ட மேற்கோளை வைத்து கேள்வி கேட்பது தவறாகும். நிலைமைகளுக்கு ஏற்ப சந்தா விகிதாச்சாரமும் கூடிக்கொண்டே வந்தது. முதலில் ஒரு பைசாவாக இருந்தது. பிறகு நான்கு பைசாவானது. பிறகு ஆறு பைசாவானது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நீங்கள் நான்கு ரொட்டிகள் சாப்பிடுகிறீர்கள் எனில் மார்க்கத்திற்காக ஒரு ரொட்டியை தியாகம் செய்யுங்கள். பிறகு இந்த கணக்கின்படி பார்த்தால் 25% தியாகம் செய்ய வேண்டியதாகிறது. பதினாறில் ஒரு பங்கு அல்ல.

ஒரு ரொட்டியின் தியாகம் என்று அன்னார் குறிப்பிட்டது கூட ஒரு குறைந்தபட்ச தியாகமேயாகும். ஒரு பைசாதான் தியாகம் செய்யச் சொல்லப்பட்டது என்று கூறுவது தவறாகும். ஜமாஅத்தின் தேவைகளுக்கேற்ப மற்றும் செலவினங்களுக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டதாகும்.

மேலும் புதிய நிகழ்ச்சிகள் மற்றும் புதிய திட்டங்களும் தீட்டப்படுகின்றன. இந்த கூடுதல் சந்தாக்களுக்குப் பிறகும்கூட செலவினங்கள் அதிகமாகின்றன. மேலும் ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளும் விரிவடைந்துள்ளன.

இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை பரப்புவதற்காக இக்காலத்தில் இமாமை அல்லாஹ் அனுப்பினான். அதற்காக எப்போதெல்லாம் செலவழிக்க வேண்டிய தேவை ஏற்பட்டபோது, இந்த சந்தாக்களால் அதனை பூர்த்தி செய்ய இயலாதபோது கலீஃபாக்கள் மேலும் நிதித்திட்டங்களை உருவாக்கி வந்துள்ளனர். அவற்றுள் மிகப் பெரிய திட்டம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அறிவித்த தஹ்ரீகே ஜதீத் நிதித்திட்டமாகும். எதிரிகள் காதியானிகளை சின்னாபின்னமாக்க முயன்றனர்.

அப்போது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒரு தப்லீக் நிகழ்ச்சியை எடுத்து வைத்தவாறு கூறினார்கள். **“ஜமாஅத் தனது தப்லீக் பணியை விரிவுபடுத்த வேண்டும். நாட்டிற்கு வெளியேயும் நாம் செல்ல வேண்டும். அஹ்மதிய்யத் என்ற இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை நாட்டிற்கு வெளியிலும் கொண்டு சேர்த்திடுங்கள்; பரப்புங்கள்”.**

பிறகு பாகிஸ்தான் உருவான பிறகு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இன்னொரு நிதித்திட்டத்தை 1957 -ல் உருவாக்கினார்கள். சிறிதளவேனும் மார்க்க அறிவு கொண்டோர் தம் வாழ்வை இறைவழியில் வக்ஃப் செய்யுமாறு கூறினார்கள். அம்மக்கள் எந்த அலுவலகத்திலும் வேலை செய்ய வேண்டாம். மாறாக, என் கீழ் வேலை செய்யட்டும். இந்த மக்களின் நிலை, நாட்டுப்புற பகுதிகளில் – கிராமப் பகுதிகளில் தப்லீக் செய்வதாகும்.

இவ்வாறு தஹ்ரீகே ஜதீதின் மூலம் உலகில் பிரச்சார நிலையங்கள் உருவானது போன்று இந்த வக்ஃபே ஜதீது திட்டத்தின் மூலம் பாகிஸ்தானின் உட்புறப் பகுதிகளில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் நேரடிப் பார்வையின் கீழ் இருந்த முஅல்லிம்களுக்கு தற்காலிக பயிற்சி அளிக்கப்பட்டு தப்லீக் களத்தில் பணிக்கப்பட்டனர். குறிப்பாக சிந்து பகுதிகளில் வக்ஃபே ஜதீது மூலம் பணிகள் நடைபெற்றன. இந்துக்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் அதிகமுள்ள பகுதியில் இஸ்லாத்தை எடுத்து வைக்க முழு முயற்சி செய்யப்பட்டது.

இவ்வாறு வக்ஃபே ஜதீதின் பணி கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்தது. முதலில் ஒரு சில தற்காலிக முஅல்லிம்கள் இருந்தனர். பிறகு அவர்களின் எண்ணிக்கை விரிவடைந்தது. சில மாதங்கள் பயிற்சிக்குப் பிறகு இவர்கள் தப்லீக் களத்திற்கு அனுப்பப்பட்டனர். பிறகு இந்த முஅல்லிம்களுக்கு பயிற்சி அளிக்கும் நிரந்தரமான அமைப்பு நிறுவப்பட்டது. இப்போது அல்லாஹ்வின் அருளால் ரப்வாவில் ஒரு மத்ரஸா உள்ளது. மத்ரஸத்துல் ஹிப்ஸ் என்ற பெயரில் அது இயங்கி வருகிறது. அங்கிருந்து கிட்டத்தட்ட மூன்று வருட Course மூலம் முஅல்லிம்கள் தயார் செய்யப்படுகின்றனர். வக்ஃபே நவ் குழந்தைகளின் எண்ணிக்கை இந்தப் பள்ளிகளில் மிகவும் அதிகமானது.

இந்த திட்டம் நான் கூறியது போன்று பாகிஸ்தானுக்கு மட்டுமே இருந்து வந்தது. இந்த சந்தா பாகிஸ்தானில் மட்டுமே அதிகம் வலியுறுத்தப்பட்டது. வெளிநாடுகளில் சிலர் தாமாகவே முன்வந்து சிறிது சந்தா கொடுத்தனர் என்றாலும், நான் ஏற்கனவே கூறியது போன்று செலவுகள் அதிகமாக அதிகமாக கலீஃபாக்கள் நிதித்திட்டங்களை எடுத்து வைத்தனர். தப்லீக் செலவுகள் அதிகமாக அதிகாக அதுவும் இந்தியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் தப்லீக் தேவைகளை மனதிற்கொண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் பாகிஸ்தானுக்கு வெளியிலும் இந்த வக்ஃபே நவ் திட்டத்தை விரிவுபடுத்தினார்கள். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தும் அதில் தீவிரமாக பங்கெடுத்தது. நான் ஏற்கனவே கூறியது போனறு ஒவ்வொரு வருடம் ஜனவரியிலும் வக்ஃபே ஜதீதின் புதுவருட அறிவிப்பு வெளியிடப்படுகிறது. வக்ஃபே ஜதீதின் பொருள் தியாகம் பற்றி குறிப்பிடப்படுகிறது. ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வுடைய பேருபகாரம், பொருள் தியாகத்தில் முன்னேறுவதில் ஒரு சிறப்பான வேகம் இருக்கிறது. ஜமாஅத் சகோதரர்கள் பொருள் தியாகத்தின் தத்துவத்தை புரிய முயற்சி செய்துள்ளனர். அல்லாஹ்வுடைய வசனத்தை செயல்படுத்த முயற்சி செய்கின்றனர். அதுபற்றி திருக்குர்ஆனில் நான் குத்பாவின் ஆரம்பதில் ஓதிய வசனத்திலும் இன்னும் பல வசனங்களிலும் கூறுகிறான்.

ஓர் உண்மையான மூஃமினுக்கு பொருள் தியாகத்தின் தத்துவம் தெளிவாக விளக்கித் தரப்பட்டுள்ளது.

நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

**மன்ஸல்லஸீ யு(q)க்ரிலுல்லாஹ (q)கர்ளன் ஹஸனன் ஃபயுளாஇஃபஹூ லஹூ அள்ஆஃபன் கஸீரா. வல்லாஹு ய(q)க்பிளு வய(b)ப்ஸு[த்]து வஇலய்ஹி துர்ஜஊன் –** அல்லாஹ்விற்கு நல்ல கடனை வழங்குபவர் யார்? அதன் காரணமாக, அவன் அதனை பன்மடங்காகப் பெருக்குவான். அல்லாஹ் (அடியாரின் பொருளைப்) பெற்றுக் கொண்டு, பெருகச் செய்கிறான். நீங்கள் அவனிடமே திரும்பவும் கொண்டு செல்லப்படுவீர்கள். (2:246)

ஹஸ்ரத் முஸ்லிஸ் மவ்வூது (ரலி) அவர்கள் பல அகராதிப் பொருள்களின் அடிப்படையில் **யு(q)க்ரிலு** என்ற சொல் குறித்து ஆய்வு செய்துள்ளார்கள். மன்ஸல்லஸீ **யு(q)க்ரிலுல்லாஹ கர்ளன் ஹஸனா** –வின் பொருளை இவ்வாறு கூறியுள்ளார்கள். அல்லாஹ்வின் வழியில் தனது பொருளிலிருந்து சிறு பகுதியைக் கொடுப்பவர் யார்?

இன்னொரு பொருள், அல்லாஹ்வின் இக்கட்டளைக்கு கட்டுப்படுபவர் யார்? இந்த நிலையில் அவர் அல்லாஹ்விடம் நற்கூலியை எதிர்பார்க்கட்டும்.

உலக அரசுகள் தமது பணியை நடத்துவதற்காக வரி விதிக்கின்றன. அவை வெறும் பொருளுடன் மட்டும் சம்பந்தப்பட்டவை. உலகியல் ரீதியாக திட்டங்களைத் தீட்டி, சமுதாய மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. பொதுமக்களின் ஒழுக்க சீர்திருத்தம், அல்லாஹ்வின் பக்கம் கவனமூட்டுதல் ஆகியவற்றின் பக்கம் எந்த திட்டமும் தீட்டப்படுவதில்லை. ஆனால் மார்க்க ரீதியாக அமைப்புகளிடம் அல்லாஹ் பொருள் தியாகம் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளான் எனில் அல்லாஹ்வுக்காக கொடுக்கும் கடன் என்பது பொருளுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. மாறாக இதில் மற்ற செயல்களும் அடங்கும். ஒரு மூஃமினின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு அவை காரணமாக அமைகின்றன. அதாவது இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக ஒரு மூஃமின் தனது பொருளையும் எடுத்து வைக்கிறார். தனது செயல்களையும் எடுத்து வைக்கிறார். பொருளும் செயல்களும் களங்கமற்ற முறையில் இறைவனுக்கு முன் எடுத்து வைக்கும் போது அல்லாஹ் பன்மடங்கு அதிகமாக்கித் தருகிறான். அல்லாஹ்வுக்கு எந்தப் பொருளின் தேவையும் இல்லை.

**பொருள் தியாகம் பற்றி அல்லாஹ் கூறுகிறான்: ஒரு மூஃமின் நற்செயல் செய்ததின் காரணத்தால் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுக் கொள்கிறார். நற்செயல் அல்லாஹ்வுக்காக மட்டும் செய்யப்படுவதால் இறை திருப்தி கிடைக்கிறது.**

எனக்கு அழகிய கடன் தாருங்கள். நான் அதற்கான தேவையுள்ளவன் என்று அல்லாஹ் கூறவில்லை. மாறாக, எனக்கு நீங்கள் அழகிய கடன் கொடுத்தால், எனது திருப்தியைப் பெறுவதற்காக செலவழித்தால் அதனை பன்மடங்கு அதிகமாக்கி உங்களுக்கே திருப்பித் தருவேன் என்று கூறுகிறான்.

நீங்கள் ஜமாஅத்தின் தேவைகளுக்காக செலவழித்தால் நான் அதற்கு கூலி தருவேன். களங்கமற்ற முறையில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செலவு செய்ய வேண்டும். செலவு செய்பவரின் உள்ளத்தில் சந்தாவை கொடுக்கும்போது உள்ளத்தில் எந்த சங்கடமும் கூடாது. இந்த தியாகத்தை இறைவழியில் மனமகிழ்வுடன் செய்ய வேண்டும் என்ற உறுதி வேண்டும். இவ்வளவு சந்தா நான் கொடுத்து விட்டேன். அதற்காக ஜமாஅத் எப்போதும் எனக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று ஒருபோதும் உள்ளத்தில் எண்ணம் வந்துவிடக் கூடாது. சந்தேகமின்றி ஜமாஅத் செயலர் சந்தா கொடுப்பவர்களுக்கு நன்றி செலுத்துகிறார். ரசீதிலும் கூட அது எழுதப்பட்டுள்ளது. ஆனால் சந்தா கொடுப்பவர்களின் உள்ளத்தில் ஜமாஅத்திற்கு உதவி செய்து விட்டோம் என்ற எண்ணம் ஒருபோதும் வரக்கூடாது. தமது பொருளை அதிகரிப்பதற்காக அவர் இறைவனிடம் ஓர் வாணிபம் செய்துள்ளார். அந்த வாணிபம் அவரது பொருளை அதிகரிப்பது மட்டுமின்றி அவரது நன்மைகளில் (கூடுதலாக) எழுதப்பட்டு மரணத்திற்கு பிறகும் கூட பயனளிக்கிறது.

ஒரு ஹதீஸில் வருகிறது: முத்தர்ரிஃப் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். (நான்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் சென்ற போது, அவர்கள் அல்ஹாக்கு முத்தகாஸிர் சூராவை ஓதிக் கொண்டிருந்தார்கள். பிறகு கூறினார்கள். ஆதமின் மகன் எனது பொருள், எனது பொருள் என்கின்றான். ஆதமின் மகனே! நீ உண்டு முடித்ததைத் தவிர உனது பொருள் எதுவும் உண்டா? அல்லது ஸதக்கா கொடுத்து உனக்கு முன்னால் அனுப்பி வைத்ததை தவிர வேறு எதுவும் உண்டா? பொருளின் தத்துவம் இதுதான். உண்டு கழித்தது உடுத்து கழித்தது போன்றவை அத்தோடு முடிந்து விடுகின்றன. மக்கள் விலை உயர்ந்த ஆடைகளை அணிகின்றனர். ஆனால் அவை ஒருநாள பழையதாக முடிந்து விடுகிறது. அல்லது சில காலம் உடுத்த பிறகு கொடுத்து விடுகிறோம். அதுவும் திரும்பி வரப்போவதில்லை. அந்த ஆடையை வாங்குவதற்காக செலவழித்த

காசும் பிறரிடம் போய் விட்டது. ஆனால் இறைவழியில் இறை திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்பட்ட செலவே தனக்கு முன்னால் மனிதன் அனுப்பிய செல்வமாகும். அதுவே மறு உலகில் பயன்படும். அதனை செலவழித்த மனிதனின் நன்மையில் அது எழுதப்படும்.

ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆட்டை அறுத்து விநியோகம் செய்தார்கள். பிறகு, அதில் ஏதும் மிச்சம் உள்ளதாக என்று கேட்டார்கள். ஒரு கையளவு மாமிசம் தவிர அனைத்தும் விநியோகிக்கப்பட்டு விட்டதாக பதில் வந்தது. ஒரு கையளவு தவிர மீதி அனைத்தும் நமக்கு மிச்சம் தான் என்று கூறினார்கள். அவை அல்லாஹ்வின் வழியில் கொடுக்கப்பட்டவையாகும். அவை மட்டுமே நமக்கு பயன்படப் போகின்றவை. எனவே எந்தப் பொருளை செலவு செய்யப்போகிறோமோ அதனை செலவு செய்து விட்டு தாம் பெரிய நன்மை செய்து விட்டதாக ஒருபோதும் நினைக்கக் கூடாது. அல்லாஹ் இவ்வுலகிலும் அதற்கு பயன் தருகிறான். மறு உலகிலும் பயன் தருகிறான்.

உலகில் கடன் கொடுத்தவர், கொடுத்ததையே திரும்பப் பெறுகிறார். அதற்காக பெரும் முயற்சி தேவைப்படுகிறது. ஆனால் அல்லாஹ் பன்மடங்காக்கி திரும்பக் கொடுத்து விடுகிறான். எனவே அல்லாஹ்வின் வழியில் பொருளை செலவழிக்கும் போது நான் வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியின் பெயரால் கொடுக்கிறேன் என்ற எண்ணத்தில் கொடுக்க வேண்டும். அந்த வானங்களின் பூமியின் அதிபதி நம்மிடம் தனக்காக கேட்கவில்லை. மாறாக பொருளை வழங்குபவனாகிய இறைவன் எனது நன்மைகாகவே கேட்கிறான் என்ற எண்ணத்தில் கொடுக்க வேண்டும்.

ஜமாஅத்திற்காக நாம் வழங்குவதாயின் மிகச் சிறந்ததை கொடுக்க வேண்டும். அதில் எந்த மோசடியும் செய்யமாட்டேன். உடன்படிக்கை மீறலும் செய்யமாட்டேன். சொந்த தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கமாட்டேன்.

நாம் ஏற்கனவே பார்த்து வந்ததைப் போன்று இதற்கு இன்னொரு பொருள்: அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்படுபவர் யார்? என்பதுமாகும். பிறகு அம்மனிதர் அல்லாஹ்வின் பிரதிபலனையே எதிர்பார்க்கிறார்.

பொருள் தியாகம் செய்து விட்டு ஒரு மூஃமின் அத்துடன் என் பணி முடிந்து விட்டது என்று கருதமாட்டார். மாறாக, நான் கூறிய நிபந்தனைகளுடன் பொருள் தியாகம் செய்து விட்ட பிறகு தனது அமல்களின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். இறைவனின் கட்டளைக்கு கட்டுப்பட வேண்டும். ஜமாஅத் அமைப்புடன் உறுதியான தொடர்பு வைக்க வேண்டும். இவையனைத்தும் எனது பயனிற்காகவே ஆகும். அல்லாஹ் தனது அடியாருடன் எந்த அளவுக்கு அன்பு காட்டுகிறான். அடியானின் நன்மைக்காக நன்மையில் அதிகரிப்பதாக கட்டளையிடுகிறான். அடியான் அக்கட்டளையை நிறைவேற்றும் போது நீங்கள் எனக்காக இந்த வேலையைச் செய்துள்ளீர்கள். இது எனக்கு அழகிய கடன் கொடுத்தது போன்றதாகும் என்று இறைவன் கூறுகிறான். பிறகு நான் அந்த கடனை பல மடங்கு அதிகமாக்கி திருப்பித் தருவேன். எந்த அமலை மனிதன் செய்தாலும் அதனை இறைவன் அழகிய கடன் என்றே கூறுகிறான். அதன் அடிப்படையில் அதனை அடியானுக்கு திருப்பித் தருகிறான். இது அல்லாஹ்வின் கருணை இறைவனின் எத்தகைய உன்னத நிலையாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

**மன்ஸல்லஸீ யு(q)க்ரிலுல்லாஹ (q)கர்ளன் ஹஸனா** – அல்லாஹ்வுக்காக அழகிய கடன் கொடுப்பவர் யார்? இதிலிருந்து இறைவனுக்கும் பசி எடுக்கும் போல் தெரிகிறது என்று அறிவற்றவர் கூறுகின்றார். முட்டாள் அதனை அறிவதில்லை. அல்லாஹ்வுக்கும் பசி எடுக்கும் என்று கருதுகிறான். அதனால் தான் கடன் கேட்கிறான் என்று அவன் நினைக்கிறார். ஆனால் கடன் என்ற சொல்லின் கருத்து என்னவென்றால் திருப்பித்தரப்போவதாக வாக்களித்து பெறப்பட்ட பொருள் என்பதாகும். அறிவற்றவர் தனது பலவீனத்தால் அப்பொருளை தந்து விடுகிறார். அல்லாஹ்வுக்காக அழகிய கடன் தருபவர் யார்? என்பதன் பொருள் அல்லாஹ் அதனை பன்மடங்காக்கி திருப்பித் தருகிறான் என்பதாகும். இது இறைவனின்

உண்மைத்தன்மைக்கு ஏற்ற செயலாகும். இறைவன் எந்த நன்மை, துஆ, உருக்கம் ஏதுமின்றி மூஃமின், காஃபிர் அனைவரையும் பரிபாலிக்கின்றவனாவான். எனவே அவனுக்காக செய்யும் பணிக்கும் பன்மடங்கு கூலி வழங்கி விடுகிறான். அல்லாஹ்வின் உண்மைத்தன்மைக்கு இன்னொரு எடுத்துக்காட்டு என்னவெனில், எவரது துஆ, வேண்டுதல், விண்ணப்பம் ஆகியவை இல்லாமலேயே படைப்பினங்களைப் பரிபாலிக்கின்றான். எல்லாருக்கும் தனது இந்த படைத்துப் பரிபாலிக்கும் பண்பின் அருளை வழங்குகிறான். அத்தகைய உன்னத இறைவன் ஒருவரது நன்மையை எப்படி விளக்குவான்? பொதுவாக எல்லாருக்கும் பயன்படுகின்ற அவனது அருளே இவ்வாறிருக்கும்போது அவனுக்காக செய்யப்பட்ட அமலுக்கு பிரதிபலன் தராமல் எவ்வாறு விடுவான்? அவனது பெருமைகளுள் ஒன்று, **மன் யஃமல் மிஸ்கால ஸர்ரத்தின் கைரய் யராஹ்** – ஓர் அணுவளவு நன்மை செய்தாலும் அதற்கும் கூலி கொடுத்து விடுகிறான். ஓர் அணு அளவு தீமை செய்தாலும் அதன் பலனும் கிடைக்கும். இதுவே இந்த வசனத்திலிருந்து பெறப்படும் கடன் என்ற சொல்லின் பொருளாகும். இதே கருத்துதான் **மன்ஸல்லஸீ யு(q)க்ரிலுல்லாஹ (q)கர்ளன் ஹஸனா** – அல்லாஹ்வுக்காக அழகிய கடன் கொடுப்பவர் யார் என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆகவே அல்லாஹ் சின்னச்சின்ன அமலையும்கூட பலன் தராமல் விட்டுவிடுவதில்லை. அவனுக்காக செய்யப்பட்ட பெரும் தியாகங்களுக்கு பிரதிபலன் தராமல் எவ்வாறு விட்டுவிடப் போகிறான்?

பொருளை அதிகப்படுத்தி தருவதும், அமலே சாலிஹா செய்வதற்கு வாய்ப்பு தருவதும் அல்லாஹ்வின் கையில் உள்ளது. எனவே அவன் முன் குனிந்து இருக்க வேண்டும்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

**வல்லாஹு யுக்பிலு வயப்ஸுது** – அல்லாஹ் (அடியாரின் பொருளைப்) பெற்றுக் கொண்டு, பெருகச் செய்கிறான். (2:246)

ஒரு மூஃமின் எப்போதும் இறைவன் மீது கவனம் வைத்திருக்க வேண்டும். நற்செயல் மூலம் அவனை திருப்திப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் பொருள் வளமும் நன்மையின் வாய்ப்பும் கிடைக்கும். மரணத்திற்குப் பிறகும் அவனது திருப்தி கிடைக்கும். இதனை ஒரு மூஃமின் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகளில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இதனை தம்முன் வைத்துள்ளார்கள். இந்த உணர்வு நம்மிடம் எப்போதும் இருக்கட்டுமாக. இந்த உணர்வு நம்மிடம் இருக்கும் வரை நாம் அவனது அருளுக்கு வாரிசாக இருப்போம்.

நான் ஏற்கனவே கூறினேன். இலண்டன் ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஜமாஅத்தின் அனைத்து திட்டங்களையும் விரிவுபடுத்த வேண்டும்; குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகள், இந்தியா ஆகியவற்றிற்கு தப்லீகிற்கு பணம் தேவை என்று உணர்ந்தார்கள். ஜமாஅத் பட்ஜெட்டைக் கொண்டு அப்பணிகளை முழுமைப்படுத்த இயலாது. அவர்கள் முழு உலகிற்கும் வக்ஃபே ஜதீத் சந்தாவை விரிவுபடுத்தினார்கள். முழு ஜமாஅத்துகளுக்கும், பணக்கார ஜமாஅத்துகளுக்கும் இந்த சந்தாவின் பொறுப்பு சுமத்தப்பட்டது. அவையும் உடனே அதனை ஆமோதித்தன. ஒவ்வொரு ஆண்டும் அதில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே தான் செல்கின்றன. அதன் அளவு எண்ணிக்கை பற்றி இறுதியில் கூறுவேன்.

அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் மூலம் தப்லீக் நிகழ்ச்சிகளில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தஹ்ரீகே ஜதீதும் தனது பணியை முதலிலிருந்தே செய்துதான் வருகிறது. ஐரோப்பா, அமெரிக்காவில் வக்ஃபே ஜதீது சந்தா மூலம் குறிப்பாக ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் பணிகள் முன்னேற்றமடைந்தள்ளன.

இந்த நாடுகளில் வாழும் அஹ்மதிகள் தியாகம் செய்வதில்லைபோலும் என்று எவரும் கருதிவிட வேண்டாம். ஆப்பிரிக்க நாடுகளிலும் மற்ற நாடுகளைப் போன்று தியாகத்தின் ரூஹ் உருவாகி உள்ளது. அது வளரவும் செய்கிறது. அம்மக்களும் அல்லாஹ்வின் அருளால் தமது செலவுகளை தாமே செய்து முடிக்க முயற்சி

செய்கின்றனர். அதே போன்று கடந்த ஒரு சில ஆண்டுகளில் இந்தியாவில் சந்தாவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தீவிர கவனம் ஏற்பட்டுள்ளது. அல்லாஹ் தியாகத்தின் தகுதியை உயர்த்துவானாக.

இப்போது உங்கள் முன் ஆப்பிரிக்காவின் சில சம்பவங்களை எடுத்து வைப்பேன்.

கானாவில் இருந்து ஜிப்ரயீல் ஸயீ சாஹிப் உடைய ரிப்போர்ட் புதிதாக பைஅத் செய்தவர்களின் பகுதிகளில் அல்லாஹ்வின் அருளால் புதிய பள்ளிவாயில்கள் கட்டப்படுகின்றன. கடந்த மாத அறிக்கையில் இரண்டு பள்ளிவாயில்கள் கட்டி முடிக்கப்பட்டதாக உள்ளது. இந்த புதிய பகுதியில் மேலும் 25 பள்ளிவாயில்கள் கட்டும் ஏற்பாடும் உள்ளது. இப்பகுதியில் புதிதாக பைஅத் செய்தவர்களுள் 30 பேருக்கு இமாம் செய்வதற்கு பயிற்சி நடைபெறுகிறது. பயிற்சி வகுப்புகள் நடக்கிறது. நகர்புற இளைஞர்களை தேர்ந்தெடுத்து தொழுகை நடத்துவதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி அளித்து இமாமாக்கி ஒவ்வொரு பகுதிக்கும் அனுப்பப்படுவார்கள். வக்ஃபே ஜதீத் மூலம் முன்னரும் தற்காலிக முஅல்லிம்களுக்கான பயிற்சி தரப்பட்டது. அதே போன்று இப்போதும் இங்கு முஅல்லிம்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது.

**சிரோலியோன் மவ்லவி சாஹிப் எழுதுகிறார்:**

மாநிலத் தலைமையகம் உள்ள ஓர் இடமான அங்கு பள்ளிவாசல் கிடையாது. பிரச்சார நிலையத்தில்தான் தொழுகை நடந்து வந்தது. விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே ஜுமுஆவிற்கு வருவர். இப்போது பள்ளிவாசல் கட்டப்பட்ட பிறகு அஹ்மதிகள் பலரும் திரும்ப வந்துள்ளனர். புது பைஅத்துகளும் நடந்துள்ளன. சந்தாவிலும் அசாதாரண வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. பள்ளிவாசலுடன் தொடர்பு ஏற்பட்டதால் நன்மைகளின் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டதால் அதனை சுற்றியுள்ள பகுதியிலும் புதிய ஜமாஅத் உருவாகியுள்ளது. அவர்களும் சந்தா கொடுக்கின்றனர். அங்கு ஒரு முஅல்லிம் தினமும் தர்பிய்யத் வகுப்பு நடத்துகிறார். ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டதால் இன்னொரு பள்ளிவாசலையும் அல்லாஹ் வழங்கினான்.

**உகாண்டா அமீர் சாஹிப் எழுதுகிறார்:**

2009-10 -ல் 25 பள்ளிவாசல்கள் கட்டப்பட வேண்டும் என்று கூறியிருந்தேன். இதில் 10 பள்ளிவாசல்கள் உகாண்டா ஜமாஅத் தனது செலவில் கட்ட வேண்டும். 15 பள்ளிவாசல்களுக்கு மர்கஸ் 30 மில்லியன் ஷில்லாங் தரும். இவ்வாறு 25 பள்ளிவாசல்கள் கட்டுமானப்பணி தொடங்கி விட்டது. புதிதாக பைஅத் செய்தவர்களிடம் இவ்வாறு புதிய ரூஹ் உருவாகியுள்ளது. பள்ளிவாசலின் வகாரே அமலும் அவர்கள் செய்கிறார்கள்.

இன்னொரு இடத்தில் 4 பள்ளிவாசல்கள் கட்ட அனுமதி கிடைத்துள்ளது. அதிலும் அவர்கள் பொருள் தியாகம் செய்துள்ளார்கள். அம்வாலே என்ற பகுதியில் ஓர் அஹ்மதி நண்பர் ஸுலைமான் சாஹிப் 15 ஆயிரம் அமெரிக்க டாலர் செலவில் ஒரு பள்ளிவாசல் கட்டி ஜமாஅத்திற்கு கொடுத்துள்ளார். ஒலிபெருக்கி ஏற்பாடும் செய்து தந்துள்ளார். அங்குள்ள அஹ்மதிகள் தியாகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். இதே நண்பர் இதுபோன்று ஒவ்வொரு ஆண்டும் பள்ளி கட்டும் பணியைத் தொடரப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளார். இவ்வாறு குர்பானியின் ரூஹ் இம்மக்களிடம் அதிகமாகி வருகிறது. மக்காமே என்ற மண்டலத்தில் ஐந்து அஹ்மதிகளைக் கொண்ட ஒரு குழு உருவாகியுள்ளது. அவர்கள் ஒவ்வொரு வருடமும் மூன்று பள்ளிவாசல்களை உருவாக்குவதை தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டனர். வருடம் முழுவதும் இதன் கட்டுமானப்பணியை செய்து வருகின்றனர். இவ்வாறு மஸ்ஜித்துகளை உருவாக்கும் ஒரு நெருப்பு இவர்களிடம் உருவாகியுள்ளது. முன்னர் இவர்கள் மர்கஸை சார்ந்து நின்றனர். இப்போது தாமே உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகியுள்ளது. சந்தாவும் கொடுக்கத் தொடங்கி உள்ளனர்.

**பெனின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்:**

பெனின் பகுதியில் ஜமாஅத்திற்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. எதிரிகள் அஹ்மதிகளுக்கு எதிராக மக்களை தூண்டும் பணியை துரிதப்படுத்தியுள்ளனர். அஹ்மதிய்யா ஜமாஅத் பள்ளி கட்டாத பகுதிகளில்

எல்லாம் சென்று நாங்கள் உங்களுக்கு பள்ளிவாசல் கட்டித் தருகிறோம். அஹ்மதிய்யத்தை விட்டு விடுங்கள் என்று கூறுகின்றனர். அரபு நாடுகளில் பைசாவைப் பெற்று ஜமாஅத்திற்கு எதிராக பெரும் சதியைத் தீட்டி வருகின்றனர்.

காங்குவா என்ற பகுதியில் எதிரிகள் அங்குள்ள அஹ்மதிகளை தடுத்த போது அங்கு பைஅத் செய்த புது அஹ்மதிகள் அவர்களிடம் கூறினர். நாங்கள் பல வருடங்களாக அஹ்மதிகளாக இருக்கிறோம். அஹ்மதிகள் தான் எமக்கு தொழுகை, நோன்புகளை கற்றுக் கொடுத்தனர். அப்போது நீங்கள் வரவில்லை. இப்போது பள்ளிவாசல் கட்டித்தர வந்துள்ளீர்களா? இங்கிருந்து சென்று விடுங்கள். பள்ளிவாசல் கட்டுவதாயின் அஹ்மதிய்யா ஜமாஅத் தான் இங்கு கட்ட வேண்டும் என்று கூறினர்.

**கோங்கோ பிராவில் உடைய கொள்கைபரப்புநர் கொடுத்த அறிக்கை இதுவாகும்:**

இங்கு 2009 -ல் 51 புதிய ஜமாஅத்தின் செடியை நாட்டுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அதன் மூலம் 22 ஜமாஅத்துகள் உருவாகியுள்ளன. தப்லீக் திட்டங்களும் உருவாகி உள்ளன. சென்ற வருடம் நாம் முதல் பள்ளிவாசலைக் கட்டினோம். இவ்வருடம் இரண்டாவது பள்ளிவாசல் கட்டி வருகிறோம். ஒரு மாதத்தில் கட்டி முடித்து விடுவோம். தப்லீக் வேலைகள் நடைபெறுகின்றன. மர்கஸிலிருந்து அதற்காக உதவியும் செய்யப்படுகின்றன. தற்போது அவர்களது நிலையும் வசதியாக இல்லை.

ஜிப்ரயில் ஸயீ சாஹிபின் அறிக்கையின்படி தர்பிய்யத் பணிகள் வடக்கு, தெற்கு ஆகிய இரு பகுதிகளிலும் (ஆப்பிரிக்காவில்) தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேற்கு ஆப்பிரிக்கா, ஆச்சின், வாகூ என்ற இரு இடங்களில் தப்லீக் பணிகள் நடக்கின்றன. வடக்குப் பகுதியில் இராபுனி சேண்ட்டி இரு இடங்களில் ஒரு குழு தப்லீக், தர்பிய்யத் பணிகள் செய்து வருகின்றன. இதுதவிர, வாலே வாலாவில் ஓவர்சீஸ் என்ற பகுதியில் 15 முஅல்லிம்கள் மட்டும் தப்லீக் பணிகள் செய்து வருகின்றனர். ஓவர்சீஸ் என்ற பெயர் சற்று வினோதமாக தென்படுகிறது. அதன் விபரம் பிறகு தெரிய வந்தது. அதேபோன்று வோல்டா பகுதியில் நடந்த தப்லீக் விளைவாக 10ஜமாஅத்துகள் உருவாகியுள்ளன. அங்கும் தப்லீக் குழுவை அனுப்பி வைக்கும் ஏற்பாடு உள்ளது. குறிப்பிடத்தக்க விஷயம் என்னவெனில், மேலே குறிப்பிட்ட ஓவர்சீஸ் என்ற பகுதி மிகவும் பரந்தது. அதற்குள் பல சிறு சிறு ஊர்கள் உள்ளடங்கி உள்ளன. ஊரில் எந்த வசதியும் இல்லை; பயணம் செய்வதன் சிரமம், தூரம் இவற்றைக் கவனத்திற் கொண்டு இப்பகுதி ஓவர்சீஸ் என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதியிலுள்ள கோக்குவா என்ற இடத்தில் முதலில் 50 பேர் பைஅத் செய்தனர். இரு முஸ்லிம் வீடுகளைத் தவிர மற்ற அனைவரும் மாற்று மதத்தினர் ஆவர். அவர்களுள் பெரும்பாலார் அஹ்மதிகளாகி விட்டனர்.

இந்த பகுதியில் ஜுமுஆ தொழுவதற்காக பள்ளிவாசலே இல்லாமல் இருந்தது. நாங்கள் முதன் முறையாக ஒரு மரத்தடியில் ஜுமுஆ தொழுதோம். இந்த தொலைதூரப் பகுதியல் முதன்முறையாக அஹ்மதிய்யத்தின் பரக்கத்தால் தான் ஜுமுஆ நடத்தப்பட்டது. இப்போது இப்பகுதியிலும் ஒரு பள்ளி கட்டும் திட்டம் உள்ளது. இன்ஷா அல்லாஹ் விரைவில் ஆரம்பமாகும்.

காங்கோ பிராஸ்வில் -லிருந்து எழுதுகின்றனர்: நமது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கேள்வி பதில் கூட்டங்கள் தொடர்கின்றன. ரேடியோ, தொலைக்காட்சி இரண்டிலும் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டு ஒரு நாத்திகர், இறைவன் இருக்கிறானா என்பதே எனக்கு புரியவில்லை. எனக்கு முதலில் அதனைப் புரிய வையுங்கள்; நான் முஸ்லிம் ஆகிறேன் என்று கூறினார். இறைவன் அருளால் அவருக்கு அரை மணிநேரத்தில் இறைவன் இருக்கிறான் என்ற விஷயம் புரிய வைக்கப்பட்டது. பெரும் கூட்டத்தில் அவர் பிரகடனம் செய்தார். இறை இருப்பு குறித்து எனக்கு எந்த பாதிரியாலும் புரிய வைக்க முடியவில்லை. ஆனால் முஸ்லிம்கள் எனக்கு திருப்தி அளிக்கும் முறையில் புரிய வைத்தனர். நான் இன்று முஸ்லிம் ஆகிறேன்.

இதே போன்று அங்கேயே பயிற்சி எடுத்து முஅல்லிமீன்கள் பணி செய்து வருகின்றனர். அவர்கள் வீட்டிற்குச் சென்று தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக கூறியதும் வீட்டினர் அவர்களை ஏசத் தொடங்கினர். நமது முஅல்லிம்கள் கூறினர். நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொண்டிருங்கள்.

ஆனால் முதலில் நான் கூறுவதை சற்று கேளுங்கள் என்று கூறினர். உடனே மக்களும், அவர் சொல்வதைச் சற்று கேளுங்கள் என்று ஒருவருக்கொருவர் அமைதிப்படுத்தியவாறு கேட்கத் தயாராகினர். நமது முஅல்லிம்கள் முதலில் பைபிள் மூலமாக தமது மறுப்பை எடுத்து வைத்து இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எடுத்துக் காட்டினர். மக்களிடம் சிறப்பான தாக்கம் ஏற்பட்டது. அப்பொழுது மக்கள் எதுவும் கூறவில்லை. மறுநாள் அம்மக்கள் நமது முஅல்லிம்களிடம் வந்து முந்தைய நாள் நடந்த சம்பவத்திற்காக மன்னிப்புக் கேட்டனர். இப்போது எங்களுக்கு விஷயம் புரிகிறது என்று கூறினர்.

நைஜீரியாவிலும் தப்லீக் பணி நடந்து வருகிறது. நிறைய இமாம்கள் வேலை செய்து வருகின்றனர். முஅல்லிம்களும் பணி செய்து வருகின்றனர். இப்பகுதியிலும் தூர தூரப் பகுதிகளில் எல்லாம் இஸ்லாத்தின் தூதுச் செய்தி பரவி இருக்கிறது. பள்ளிவாசல் கட்டும் முயற்சியும் நடந்து வருகிறது.

**ஃபுர்கினோபாஸோ அமீர் சாஹிப் எழுதுகிறார்:**

டிசம்பர் மாதம் ஒரு பெரியவர் நமது பிரச்சார நிலையத்திற்கு வந்தார். அவருக்கு வயது 85. பைஅத் செய்ய வந்ததாகக் கூறினார். நீண்ட காலமாக அவர் ஜமாஅத்தின் ரேடியோ நிகழ்ச்சிகளை கேட்டு வருகிறாராம். வாழ்க்கைக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே நான் பைஅத் செய்து விட விரும்புகிறேன் என்றார். நமது இன்னொரு பிரச்சார நிலையத்திற்கு 40 பேர் வந்தனர். பைஅத் செய்தனர். அவர்கள் கூறினர்: எங்களுக்கு அஹ்மதிய்யத்தின் ரேடியோ நிகழ்ச்சிகள் மூலம் ஜமாஅத்தைப் பற்றிய செய்தி கிடைத்தது.

வயோகியாவின் மிஷினரி எழுதுகிறார்: டுபாவ்மென் காவ் என்ற ஊரில் நமது Review of Religion பத்திரிகை விநியோகித்துக் கொண்டிருந்தோம். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய Photo இருந்தது. அந்த பத்திரிகையை ஒருவரிடம் கொடுத்த போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய Photo வைப் பார்த்து, இந்த பெரியவரை நான் பலமுறை எனது கனவில் கண்டுள்ளேன் என்று கூறினார். இவர்தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநரும், மஸீஹ் மவ்வூதும் ஆவார் என்று கூறப்பட்டதும் உடனே பைஅத் செய்தார்.

இவ்வாறு நிறைய சம்பவங்கள் உள்ளன. எனினும் நேரம் மிகவும் குறைவாகவே உள்ளது.

வக்ஃபே ஜதீதின் அறிக்கையை உங்கள் முன் வைக்கிறேன். இந்த அறிக்கையை எடுத்து வைத்ததுடன் புதிய வருடத்திற்கான அறிவிப்பையும் செய்கிறேன். இவ்வருடத்தை அல்லாஹ் அளவற்ற அருட்களை சுமந்து வரும் ஆண்டாக ஆக்குவானாக! முன்பை விட அதிகமாக தியாகம் செய்யும் வாய்ப்பு கிடைக்கட்டுமாக!

இவ்வருடம் அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் 52 -வது வருடமாகும். ஜமாஅத் 35 இலட்சத்து 21 ஆயிரம் பவுண்டு பொருள் தியாகத்தை கடந்த (2009 ஆம்) ஆண்டு வக்ஃபே ஜதீது மூலம் செய்துள்ளனர். இது சென்ற வருடத்தை விட 3 இலட்சத்து 45 ஆயிரம் பவுண்டு அதிகமாகும். பாகிஸ்தான் வழக்கம் போல் முதலிடத்தில் உள்ளது. ஏழ்மை மற்றும் பல பிரச்சனைகளுக்கு மத்தியில் இம்மக்கள் தியாகம் செய்துள்ளனர். 8 ஆயிரம் பேர் இவ்வாண்டு புதிதாக வக்ஃபே ஜதீதில் இணைந்துள்ளனர். அமெரிக்கா இரண்டாவது இடம். இவர்களும் கடந்த ஆண்டை விட 62 ஆயிரம் டாலர் அதிகமாக வழங்கியுள்ளனர். பிரிட்டன் மூன்றாவது இடம். பிரிட்டன் இவ்வருடம் ஒரு இலட்சத்து எட்டாயிரம் பவுண்டு அதிகமாக இவ்வாண்டு கொடுத்துள்ளது. 2000 பேர் புதிதாக வக்ஃபே ஜதீதில் இணைந்துள்ளனர். அமெரிக்கா பிரிட்டன் இரண்டும் முறையே இரண்டாவது, மூன்றாவது இடத்தில் இருக்கின்றன. அமெரிக்காவில் சிலர் கடைசியில் அசாதாரணமான தொகையைக் கொடுத்து குறைபாட்டை சரி செய்து இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளனர் என்று நான் கருதுகிறேன். இவ்வாறு அவர்கள் பிரிட்டனை விட சில ஆயிரம் பவுண்டுகள் மேலே சென்று விட்டனர். ஆனால் பொதுவாக அறிக்கையினைப் பார்க்கும் போது புதிதாக மக்களைஇணைப்பதில் பிரிட்டன் தான் அதிக கவனம் செலுத்தியுள்ளது. பாராட்டக்கூடிய முயற்சியை செய்திருக்கின்றனர். அமெரிக்காவிலும் அசாதாரணமான தியாகம் செய்த சிலரை தவிர்த்து விட்டு பார்த்தால் பிரிட்டன்தான் இரண்டாவது இடம். எனவே அமெரிக்கவின் இரண்டாவது ஐந்தாறு பேரின் குர்பானியின் பயனால் கிடைத்ததாகும். ஆனால் ஒட்டுமொத்தமாக பார்க்கும்

போது அமெரிக்கா ஜமாஅத் பிரிட்டன் அளவுக்கு கவனம் செலுத்தவில்லை. முயற்சியும் செய்யவில்லை. இந்த அடிப்படையில் அடுத்த வருடம் பிரிட்டன் ஜமாஅத் மூன்றாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் இன்ஷா அல்லாஹ். மூன்றாவது இடம் ஜெர்மனிக்கு கிடைத்துள்ளது. சென்ற வருடம் நான்காவது இடத்தில் இருந்தது. ஒரு இலட்சத்து ஒன்பதாயிரம் யூரோ சென்ற வருடத்தை விட அதிகமாக வழங்கியுள்ளது. கனடா ஐந்தாவது இடம். குழந்தைகளிடம் இந்த ஜமாஅத் மிகவும் பணியாற்றி உள்ளது. இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது. அவர்களும் கூட கரன்சியில் 29 இலட்சம் ரூபாய் சென்ற வருடத்தை விட அதிகமாக்கி உள்ளனர்.

தியாகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக இந்தியா முன்னேறிக் கொண்டிருக்கிறது.

ஏழாவது இடம் இந்தோனேஷியா. எட்டாவது ஆஸ்திரேலியா. இந்த ஜமாஅத் பத்தாவது இடத்திலிருந்து எட்டாவது இடத்திற்கு முன்னேறி உள்ளது. ஒன்பதாவது இடம் பெல்ஜியம். பத்தாவது இடம் பிரான்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்து.

உள்ளூர் கரன்சியாகிய பவுண்டின் அடிப்படையில் முதல் ஐந்து நாடுகள்: 1) ஆஸ்திரேலியா 2) இந்தியா 3) ஜெர்மனி 4) பிரிட்டன் 5) பெல்ஜியம் ஆகியவை கடந்த வருடத்தை விட அதிகம் வசூல் செய்துள்ளன.

தனி நபர் முன்னேற்றம் சென்ற வருடத்தை விட அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது. ஒரு சில பணக்காரர்கள் அதிகமாக பணம் தந்து குறையை சரியாக்குகின்றனர். பிரான்ஸ் இரண்டாவது இடம். பிரிட்டன் மூன்றாவது இடம். சுவிட்சர்லாந்து நான்காவது இடம். கனடா ஐந்தாவது இடம்.

ஆப்பிரிக்காவில் கானா முதலிடம் பெற்றுள்ளது. நைஜீரியா இரண்டாமிடம். மொரீசியஸ் மூன்றாவது இடம். புர்கினோபாஸோ நான்காவது இடம். இந்த ஜமாஅத் 43% புதிய மக்களை வக்ஃபே ஜதீது சந்தாவில் இணைத்துள்ளது. புதிதாக வருபவர்களிடம் ரூஹை உருவாக்க வேண்டும் என்று கூறினேன். புர்கினோபாஸோ அதற்காக முயற்சி செய்துள்ளது. ஐந்தாவது இடம் பெனின். இது தவிர இன்னும் பல நாடுகள் முயற்சி செய்துள்ளன.

வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்துபவர்களின் எண்ணிக்கை அல்லாஹ்வின் அருளால் 73 ஆயிரத்தை விட அதிகமாகி விட்டது. 36 ஆயிரத்து 323 பேர் சென்ற வருடத்தை விட இவ்வருடத்தில் அதிகமாக இணைந்துள்ளனர்.

பாகிஸ்தானில் சிறியவர்கள், பெரியவர்கள் என தனித்தனியாக சந்தா கணக்குகள் தயார் செய்யப்படுகின்றன. அதேபோல் கனடாவிலும் சிறியவர், பெரியவர் என சந்தா கணக்குகள் தயார் செய்யப்படுகின்றன.

(ஹுஸூர் அவர்கள் தஹ்ரீகே ஜதீது சந்தாவில் பாகிஸ்தானின் தர வரிசையில் முதல் 10 மற்றும் கனடா ஜமாஅத்தின் தர வரிசையில் முதல் 5 இடங்களைக் குறிப்பிட்டார்கள்.)

பிறகு கூறினார்கள்: இந்த தியாகம் செய்தவர்களின் பொருள்களிலும் உயிர்களிலும் அல்லாஹ் அபிவிருத்தி வழங்குவானாக. இவர்களின் நம்பிக்கை மற்றும் தூய்மையை அதிகரிப்பானாக.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த குழப்பங்கள் நிறைந்த காலத்தில் ஒவ்வொருவரும் தமது கடைசி நிலையை எண்ணிப் பார்ப்பது கடமையாகும். இறைவனுக்கும் அவனது அடியானுக்கும் இருக்க வேண்டிய நுட்பமான தொடர்பு மிகவும் பலமாக அசைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தமது நல்ல முடிவுக்காக ஒவ்வொருவரும் கவலைப்படும் அமலே சாலிஹாவுடன் சம்பந்தப்பட்ட ஈடேற்றம் மற்றும் தனது விருப்பத்திற்குரிய பொருளை தியாகம் செய்தல், தனது விருப்பத்திற்குரிய காலத்தை தியாகம் செய்தல் மூலம் இறை திருப்தியை பெறுங்கள். இறைவனது உண்மையான சட்டத்திற்கு பயப்படுங்கள். அவன் தனது தூய வேதத்தில் கூறியுள்ளான்.

**லன் தனாலுல்பிர்ர ஹத்தா துன்ஃபிகூ மிம்மா துஹிப்பூன்** – நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து, (இறைவனுக்காகச் செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெற முடியாது. (3:93)

அல்லாஹ் எப்போதும் நற்செயலுக்கு வாய்ப்பளிப்பானாக. குர்பானிகளுக்கும் இறைதிருப்தியைப் பெறவும் எப்போதும் தயாராகஇருப்போமாக.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உன்னத கொள்கையை மேல் நோக்கி எடுத்துச் செல்வோமாக!

இன்று ஒரு துயரம் மிக்க சம்பவம் ஒன்றும் உள்ளது.

லாஹூரைச் சேர்ந்த முஹம்மது யூசுஃப் ஜனவர் 5 –ம் தேதி காலையில் மகனுடைய பலசரக்குக் கடையில் உட்கார்ந்திருந்தார். இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து துப்பாக்கியால் சுட்டனர். மகன் வெளியில் வந்து பார்த்த போது தந்தையை படுகாயமுற்ற நிலையில் கண்டார். மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் வஃபாத் ஆகி விட்டார். **இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.**

**ஷஹீத்** மர்ஹூம் அவர்களுடைய வயது 65. இந்தப் பகுதியில் அஹ்மதிகளுக்கு எதிராக பேனர் வைத்தும் பிரசுரங்கள் விநியோகித்தும் மவ்லவிமார்கள் ஜமாஅத்திற்கு எதிராக பகைமையை தூண்டி வந்தனர். இவர் ஜமாஅத் தலைவராக இருந்தார். சயீம் அன்சாருல்லாஹ்வாகவும் இருந்தார். இருமுறை இறைவழியில் கைதாகும் வாய்ப்பும் பெற்றிருந்தார். இனிமையானவர். M.Ed. முடித்திருந்தார். ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். லாஹூரில் Senior Science Teacher ஆகவும், அரசுப் பள்ளிக்கூடத்தில் தலைமையாசிரியராகவும் பணியாற்றினார். ஓய்வு பெற்ற பிறகு ஒரு பள்ளிக்கூடமும் நடத்தினார். குடும்பம் தனியாக அவரை விட்டு விட்ட போதும் கூட உறுதியாக நிலை நின்றார். காலத்தின் கலீஃபாவின் கட்டளையை நிறைவேற்றுவதில் உறுதியானவர். அதே போன்று குழந்தைகளுக்கும் தர்பிய்யத் கொடுத்து வந்தார். எல்லா பிள்ளைகளுக்கும் ஜமாஅத்துடன் நல்ல தொடர்பு இருந்தது. அவரது எல்லா குழந்தைகளும் வஸிய்யத் அமைப்பில் இணைந்துள்ளனர். அவரது நினைவாக ஒரு மனைவி ஒரு மகள் 4 மகன்கள் உள்ளனர்.

இன்ஷா அல்லாஹ் ஜுமுஆவிற்குப் பிறகு ஜனாஸா காயிப் நடத்துவேன். இவரது குடும்பத்தினருக்கு அல்லாஹ் பொறுமையை வழங்குவானாக. இவரது தகுதியை உயர்த்துவானாக. ஜன்னத்தில் இவரது நேசத்திற்குரியவர்களின் பாதத்தின் கீழ் இவருக்கும் இடம் தருவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 08.01.2010

Translated by : Maulavi M. NIZAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456